**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**
**அசல் வழக்கு எண். 347/2007**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.01.2026** |
| **பெயர்** | **அமரேந்திரராவ்** |
| **த/பெ** | **வசந்தராவ்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 05.10.p.m.**

**கூடுதல் முதல் விசாரணை–**

1. நான் இவ்வழக்கின் 5ம் பிரதிவாதியாவேன். எனது வாக்குமூலம் கூடுதல் பிரமாணப் பத்திரம் மூலம் கூடுதல் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**2. (1).** 09.09.2016 தேதியிட்ட 3ம் பிரதிவாதி சொர்ணகாந்த ராவி இறப்பு சான்று கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **பி.சா.ஆ 12** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(2). 08.02.2016 தேதியிட்ட 12 ம் பிரதிவாதியால் வழக்கு சொத்திற்கு செலுத்தப்பட்ட நில வரி ரசீது அசல் **பி.சா.ஆ 13** எனவும்.

(3). 03.02.2011 தேதியிட்ட 12 ம் பிரதிவாதியால் வழக்கு சொத்திற்கு

செலுத்தப்பட்ட நில வரி ரசீது அசல் **பி.சா.ஆ 14** எனவும்.

(4). 14.03.2014 தேதியிட்ட 12 ம் பிரதிவாதியால் வழக்கு சொத்திற்கு செலுத்தப்பட்ட நில வரி ரசீது அசல் **பி.சா.ஆ 15** எனவும்.

(5). 06.12.2007 தேதியிட்ட 12 வது பிரதிவாதி பெருக்கு வழங்கப்பட்ட பட்டா, பட்டா எண் 1496 அசல் **பி.சா.ஆ 16** எனவும். **(எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

(6). 14.11.2025 தேதியிட்ட 12 ம் பிரதிவாதியால் வழக்கு சொத்திற்கு செலுத்தப்பட்ட நில வரி ரசீது அசல் **பி.சா.ஆ 17** எனவும்.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 05.16.p.m**